தினகரன் செய்தித்தாள்-நாள்:18.02.2017- பக்கம்-16

### எல்கேஜி, யுகேஜி மாணவர்களுக்கு

# ஆதார் அட்டைக்கு புகைப்படம் எடுக்கும் பணி: சிஇஓ ஆய்வு

திருத்துறைப்பூண்டி, பிப்.18: திருத்துறைப்பூண்டியில் ஆதார் அட்டைக்குபுகைப்படம் எடுக்கும் பணியை சிஇஓ ஆய்வு செய்தார்.

திருவாரூர் மாவட்டம் முழுவதும் உள்ள பள்ளிகளில் 1ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை மாணவர்களுக்கு ஆதார் அட்டை எடுக்கும் பணி ஏற்கனவே நிறைவு பெற்றது. தற்போது மாவட்டம் முழுவதும் உள்ளபள்ளிகளில்எல்கேஜி, யுகேஜி மாணவர்களுக்கு ஆதார் அட்டை எடுக்கும் பணி கடந்த 16ம்தேதி முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது. திருத்துறைப்பூண்டி சாய்ராம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் ஆதார் அட்டை எடுக்கும் பணியினை மாவட்ட முதன்மைகல்வி அலுவலர் பார்வதி ஆய்வு செய்தார். பின்னர் அவர் கூறுகையில், எல்கேஜி,யுகேஜிமாணவர்களுக்குமாவட்டம்முழுவதும் உள்ள பள்ளிகளில் ஆதார் அட்டைஎடுக்கும்பணிஇன்னும்1வாரத்தில்நிறைவுபெற உள்ளது. ஏற்கனவே 1 முதல் 12ம்வகுப்புவரை விடுபட்ட மாணவர்கள் இப்போது எடுத்துக் கொள்ளலாம். எல்கேஜி, யுகேஜி மாணவர்கள் பிறப்புசான்றிதழ், பெற்றோரின் ஆதார் அட்டை நகலுடன் பள்ளியில் வந்து பதிவு செய்து கொள்ள வேண்டும். இதற்கு பெற்றோர்கள் முழுஒத்துழைப்பு வழங்கவேண்டும்என்றார்.



திருத்துறைப்பூண்டி சாய்ராம் மெட்ரிக் பள்ளியில் எல்கேஜி, யுகேஜி மாணவர்களுக்கு ஆதார அட்டை எடுக்கும் பணியை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பார்வதி ஆய்வு செய்தார்.